14 NOV 1985

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்

---

*[1984, ஏப்ரில் மாதம் 4 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1984, ஏப்ரில் மாதம் 6 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 தபாற் செலவு : சதம் 60

## 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்

[1984, ஏப்ரில் மாதம் 4 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 26/82
1603

**தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினைத் தாபிப்பதற்கும், அத்தகைய சபையின் தத்துவங்களைக் குறித்துரைப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந் தேதியும்.

1. இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினைத் தாபித்தல்.

2. (1) இதனகத்துப்பின்னர் " சபை " எனக் குறிப்பிடு செய்யப்படும், தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையென அழைக்கப்படவேண்டிய சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும்; அச்சபை, அவுடதத்துர்ப்பிரயோகம் செய்வோரைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், அவர்களுக்குச் சிகிச்சை செய்தல், புனர்வாழ்வளித்தல் என்பன தொடர்பில் தேசிய கொள்கையொன்றினை வகுத்தமைத்தல், மீளாய்தல் என்பன பொறுப்பிக்கப்பட்ட முதன்மைத் தேசிய நிறுவனமாதல் வேண்டும்.

(2) அமைச்சரின் பொதுப்பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, சபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதற்கான பொறுப்புடையதாதல் வேண்டும்.

(3) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு, இடையறுவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருக்கும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் வழக்குத் தொடுக்கலாம்; அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

சபையினை அமைத்தல்.

3. (1) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இதனகத்துப்பின்னர் " நியமன உறுப்பினர்கள் " எனக் குறிப்பீடு செய்யப்படும், அமைச்சரால் நியமிக்கப்படவுள்ள தவிசாளர் ஆக இருக்கவேண்டிய உறுப்பினரொருவரும் வேறிரு உறுப்பினர்களும் ;

(ஆ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது அவரின் நியமத்தர் ;

(இ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரின் நியமத்தர் ; அத்துடன்

(ஈ) ஆயுள்வேத ஆணையாளர்.

2—ஏ 075785—2,675 (03/84)

(2) சபையின் ஒவ்வொரு நியமன உறுப்பினரும், பதவி நீங்குதல் மூலம், இறத்தல்மூலம் அல்லது அகற்றப்படுதல் மூலம் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு களைக்கொண்ட காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) நியமன உறுப்பினரொருவர், அமைச்சருக்கு அதுபற்றி முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதமூலம் எந்நேரத்திலாயினும் தனது பதவியிலிருந்து நீங்கலாம்.

(4) நியமன உறுப்பினரொருவர் இறப்பின் அல்லது தாமாக பதவி நீங்கின் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படின், அமைச்சர், இறக்கின்ற, பதவிநீங்குகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற உறுப்பினரின் இடத்தில் வேறெவரேனுமாளை உறுப்பினரொருவராக நியமிக்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினரொருவர், இறப்பதன்மூலம், பதவி நீங்குவதன்மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, தமக்கு முன்னுள்ளவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(6) சபையின் நியமன உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாததொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருக்கின்றவிடத்து, அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அமைச்சரானவர் அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) அகற்றப்படுவதன் மூலமாகவல்லாது வேறுவகையாக பதவியை வறிதாக்கும் சபையின் எவரேனும் நியமன உறுப்பினர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது.

4. சபையின் செயலெதுவும் அல்லது நடவடிக்கையெதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது சபையின் உறுப்பினரொருவரின் நியமனத்திலுள்ள குறைபாடு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

சபை உறுப்பினர்களின் ஊதியம்.

5. சபையின் உறுப்பினர்களுக்கு, அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் அளிக்கப்படல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

6. (1) சபையின் தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைவகித்தல் வேண்டுமென்பதுடன், சபையின் கூட்டமெதிலும் தவிசாளர் வருகை தராதபோது அத்தகைய கூட்டத்தில் சமுகமளிக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமை வகிப்பதற்கெனத் தமக்கிடையேயிருந்து ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.

(2) சபையின் மூன்று உறுப்பினர்கள் சபையின் கூட்டமெதிலும் கூட்ட நடப்பெண்ணாக அமைதல் வேண்டும்.

(3) சபையானது (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மாதமொன்றுக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவது தொடர்பிலும் அதன் சொந்த நடவடிக்கைமுறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

சபையின் தத்துவங்கள்.

7. சபையானது—

(அ) அபாயகரமான அவுடதங்களைத் துர்ப்பிரயோகம் செய்வதனைத் தடுத்தலும், கட்டுப்படுத்தலும் தொடர்பில் தேசியக் கொள்கையொன்றினை வகுத்தமைப்பதற்கும், மீளாய்வு செய்வதற்கும், அத்துடன் அத்தகைய கொள்கையின்மீது அமைச்சருக்கு ஆலோசனையளிப்பதற்கும் விதப்புரைகள் செய்வதற்கும்;

(ஆ) சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு நியாயமாக அவசியமாயிருக்கக்கூடியவாறான அத்தகைய தகவலையும் விபரங்களையும் தனியாட்களிடமிருந்தும், ஒழுங்கமைப்புகளிடமிருந்தும், அரசாங்கத் திணைக்களங்களிடமிருந்தும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களிடமிருந்தும் கோருவதற்கும் :

ஆயின், எவ்வாறாயினும், உறுப்பினரெவரும், இப்பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது விபரங்களை வெளிப்படுத்தும்படி சட்ட நீதிமன்றமொன்றினால் தேவைப்படுத்தப்பட்டாலன்றி அல்லது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்காகவன்றி, அவ்வாறு வெளிவிடுதலாகாது ;

(இ) சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கென உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து நன்கொடைகளையும் மானியக்கொடைகளையும் பெறுவதற்கும் ;

(ஈ) அபாயகரமான அவுடதங்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள மூகவர் நிலையங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் ;

(உ) அவுடதங்களில் தங்கிவாழும் ஆட்களுக்குச் சிகிச்சை செய்தல், புனர்வாழ்வளித்தல் என்பவற்றிற்கான வழிவகைகளை மேம்படுத்துவதற்கும், பிள்ளைகளுக்கும் வயதுவந்தோர்க்குமென தேசிய அவுடதத் துர்ப்பிரயோகத் தடுப்புக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கும் ;

(ஊ) அபாயகரமான அவுடதங்களைத் துர்ப்பிரயோகம் செய்வதினாலுரு வாகும் நிகழ்நோய்க் காரணவியல், மற்றும் சட்ட, மருத்துவ, சமூக, பண்பாட்டு, பொருளாதாரப் பாதிப்புகள் பற்றிய ஆராய்ச்சிக் கற்கைகளை நடாத்துவதற்கும் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும்; அத்துடன்

(எ) அவுடதக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தேசிய, பிராந்திய, அனைத்துலக ஒழுங்கமைப்புகளுடனும் முகவர் நிலையங்களுடனும் தொடர்பினைப் பேணிவருவதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

உப குழுக்களை நியமித்தல்.

8. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக சபையானது ஏதேனும் உப குழுவை நியமிக்கலாம்; அமைச்சர் அதற்குக் கையளிக்கக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களினதும் கடமைகளினதும் பிரயோகமும், புரிகையும் நிறைவேற்றுகையும் அதற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் பணியாட் டொகுதி.

9. (1) சபையின் தவிசாளர் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(2) சபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக—

(அ) அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்காகவும் புரிவதற்காகவும் அவசியமானவர்களென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை வேலைநீக்கம் செய்யலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் எவ்வூதியம் கொடுக்கப்படவேண்டுமோ அவ்வூதியத்தின் வீதங்களை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதிகளையும், நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்கென சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம், அத்துடன், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவு தொகைகளை வழங்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் சபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்படும் விதியெதுவும், அது அமைச்சரால் அங்கீகரிக்கப்படும்வரை வலுவுடையதாதலாகாது.

சபையின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க சேவையி லிருந்து அலுவலர்களை நியமித்தல்.

10. (1) சபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும் அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், சபையினால் அதே போன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கென சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அந்த அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதற்கு உடன்படுவதாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளவரான எவரேனும் ஆளைச் சபையானது ஊழியத்துக்கமர்த்துமிடத்து அந்த ஆளினால் சபைக்குச் செய்யப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்திற்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்குச் செய்யப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

இரகசியம் பேணல்.

11. சபையின் எல்லா அலுவலர்களும், சேவையாளர்களும் தமது கடமைகளில் ஈடுபடுவதற்கு முன்னர், எல்லாச் செயற்பாடுகளும், பெறப்படும் தகவல்களும் தொடர்பிலும், அவற்றோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கடுமையான இரகசியத்தைக் கடைப்பிடிப்பார்களென உறுதியளிக்கும் வெளிப்படுத்துகையொன்றில் ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை மூலம், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, அதாவது—

(அ) (i) சபையினால், அல்லது

(ii) சட்டநீதிமன்றமொன்றினால், அல்லது

(iii) அத்தகைய கருமங்கள் எந்த ஆள் தொடர்பிலானவையோ அந்த ஆளினால்,

அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது ;

(ஆ) தமது கடமைகளைப் புரிகையில் ; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு,

தமது கடமைகளை நிறைவேற்றுகையில் தமது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் கருமத்தினை வெளிக்காட்டமாட்டாரென உறுதியளித்தலும் வேண்டும்.

நிதியம்.

**12.** (1) நிதியமொன்று தாபிக்கப்பட்டு பேணிவரப்படுதல் வேண்டும். இந்நிதியமானது, அமைச்சர் காலத்துக்குக்காலம் கொடுக்கக்கூடிய வாறான அத்தகைய பணிப்புரைகளுக்கிணங்கச் சபையால் நிருவகிக்கப் படுதலும் கட்டுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) பின்வருபவை இந்நிதியத்தினுள் செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) சபையின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(ஆ) எவ்வகையினதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்பன வகையாக சபையினால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) நிதியத்தின் பணங்கள்—

(அ) அபாயகரமான அவுடதங்களின் துர்ப்பிரயோகத்தைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காகவும் ;

(ஆ) சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியமளிப்பதற்காகவும் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் சபையினால் உறப்படக்கூடிய வேறு செலவுகளுக்காகவும்,

பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.